**சேருவில பிரதேச சபை**
**திருகோணமலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 17 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஒக்தோபர் 29 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சேருவில பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப் பணமாகக் கிடைக்க வேண்டிய ரூபா 1,420,450 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 9,124,422 தொகையான செலுத்த வேண்டிய கணக்குகளுக்குரிய மீதி உறுதிப்படுத்தல் கடிதம், காலப்பகுப்பாய்வு அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோப்பின் 59 ஆவது விதி | சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய வியாபார நிறுவனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) உள்ளூராட்சி, மாகாணசபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | 06 மாதங்களுக்கு ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்படவேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான 16 வாகனங்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |

(இ) மாகாண நிதி விதி இல - 237

வழங்கப்பட்டு 06 மாதங்களைக் கடந்திருந்த போதிலும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 45,926 பெறுமதியான 27 காசோலைகள் தொடர்பில் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நி.பி 571

2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய மீளச் செலுத்தவேண்டிய கேள்வி வைப்பான ரூபா 171,581 மீதியைத் தீர்த்து வைப்பதற்கோ அல்லது வருமானமாகக் கணக்கீடு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,516,011 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,081,004 ஆக இருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பிடியாணைக் கட்டணம் மற்றும் தண்டப்பண பெறுவனவு ரூபா 7,374,630 இனால் குறைவடைந்தமை மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 5,564,993 இனால் குறைவடைவதற்கு பிரதானமான காரணமாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| ஆதனவரி | 25 | - | 25 |
| வாடகை | 2,399 | 3,788 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 428 | 552 | - |
| ஏனைய வருமானம் | 17,251 | 12,451 | 4,800 |

**2.2.2 கடை வாடகை**

02 வருடங்கள் முதல் 04 வருடங்கள் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 146,478 கூட்டுப்பெறுமதியான கிடைக்க வேண்டிய கடை வாடகையை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

**ஆயுர்வேத வைத்திய நிலையம்**

ஆயுர்வேத வைத்திய நிலையத்தின் புள்ளி விபரங்களின் படி 2013 ஆம் ஆண்டில் 1,711 நோயாளர்களுக்காகவும் 2014 ஆம் ஆண்டின் முதல் 05 மாதங்களில் 1,186 நோயாளர்களுக்காகவும் மருந்து விநியோகிக்கப்பட்டிருந்தது. பிரதேச சபையினால் கோரப்பட்டிருந்த போதிலும் ஆயுர்வேத வைத்தியரொருவர் ஆயுர்வேதத் திணைக்களத்தின் மூலம் நியமிக்கப்படாமையினால் ஆயுர்வேத வைத்திய நிலையம் 2014 யூன் மாதம் முதல் மூடப்பட்டிருந்தது. இதன் காரணமாக பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய 14,741 எண்ணிக்கையிலான பொது மக்களுக்கு சேவையினை வழங்கி அவர்களின் சுகாதார நிலையினை மேம்படுத்தும் பிரதேச சபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

(அ) 2015 ஏப்ரல் 21 ஆந் திகதி நடைபெற்ற பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் சிபாரிசு செய்யப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2015 யூலை 17 ஆந் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காணிகளின் சட்டரீதியான உரித்தைக் கையேற்காமல் ரூபா 111,501,038 தொகையான கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தும் அந்த நிர்மாணங்களின் பெறுமதி இறுதி நிதிக்கூற்றுக்களில் காணியும் கட்டிடமுமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் சபையினால் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணிகளின் சட்டரீதியான உரித்தைக் கையேற்பதற்கு இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

**3.3.1 பிரதேச சபைக் கட்டிட நிர்மாணம்**

புறநெகும செயற்திட்டத்தின் கீழ் பிரதேச சபையின் அலுவலகத்திற்காக இரண்டு மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 27,709,341 (பெறுமதிசேர் வரி தவிர்த்து) பெறுமதியில் 06 மாத காலத்தில் நிர்மாணங்களைப் பூர்த்தி செய்யும் அடிப்படையில் 2012 திசெம்பர் 17 ஆந் திகதி ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கட்டிடத்தின் கூட்ட மண்டபத்தில் உள்ள பைபர் (Fiber) இற்கு அடுத்தாவுள்ள பலகையினால் மேவுகை செய்யப்பட்ட சிவ்லிமிற்கு கூரையிலிருந்து தண்ணீர் தெறிப்பதனால் சிவ்லீம் துருப்பிடித்தலுக்குள்ளாகியிருந்தது. சிவ்லீமின் 04 இடங்களில் நீர் கணிசமான அளவில் கசிகின்றமை 2015 யூலை 15 ஆந் திகதி மேற்கொண்ட

கணக்காய்வு களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் அதனைப் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கட்டிடத்தின் பொறியியலாளர் மதிப்பீட்டில் காண்பிக்கப்பட்ட மாதிரிகளுக்கு இணங்க சபையின் கதவு மற்றும் யன்னல்கள் நிர்மாணிக்கப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் அவைகள் மதிப்பீட்டு மாதிரிகளின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்டதாக உறுதிப்படுத்தி ரூபா 1,842,680 தொகை செலுத்தப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| அளவிடைப் பத்திரத்தின் படி விடயத்தின் இலக்கம் | பொறியியலாளர் மாதிரியின் படியான செயற்பாடுகள் | பூர்த்தி செய்யப்பட்ட செயற்பாடுகள் | செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|---|
| | | | ரூபா |
| M.2 | Aluminum & glazed door with fanlight(D1) with sum thick glass | Aluminum & glazed door with lazed fixed windows | 50,490 |
| M.8-M.11 | Aluminum & glazed windows with fanlight with thick glass | Aluminum & glazed windows with lazed fixed windows | 1,349,000 |
| M.13-M.14 | Aluminum & glazed with fanlight with sum thick glass | Aluminum & glazed windows with lazed fixed windows. | 443,190 |

(இ) கட்டிடத்தில் நிர்மாணிக்கப்பட்ட 105 கண்ணாடி யன்னல்களுக்கான பொறியியல் மதிப்பீட்டின் படி Grill மேவுகைக்காக 140 சதுர மீற்றருக்கு ரூபா 630,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த மேவுகை இடப்படாதிருந்ததுடன் அது சபையின் பாதுகாப்புக்கு பிரச்சினையாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2007 இன் 13 ஆம் இலக்க மற்றும் 18 ஆம் இலக்க நிதி திருத்த அதிகாரச்சட்டங்களில் திருத்தப்பட்ட 2005 இன் 03 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் III ஆம் பகுதியின் பிரகாரம் ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 30,065,945 இற்குரிய நிர்மாணச் சான்றிதழ் நிதிய வரி (CIGFL) ஆன ரூபா 75,165 தொகை நிறுத்தி வைக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 02 | 01 | 01 |
| இரண்டாம் நிலை | 17 | 12 | 05 |
| மூன்றாம் நிலை | 20 | 15 | 05 |
| மொத்தம் | 39 | 28 | 11 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 யூன் மாதம் முதல் வெற்றிடமாகக் காணப்படுகின்ற பிரதேச சபையின் ஆயுர்வேத வைத்தியர் பதவிக்காக தகுதியான நபரை நியமிப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 யூலை 17 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நூலகர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், மின் தொழில்நுட்ப உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், வருமானப் பரீட்சகர், சாரதி, இயந்திர இயக்குனர் மற்றும் வேலைப் பரீட்சகர் போன்ற பதவிகளில் 02 முதல் 05 வருடங்கள் வரையிலான காலகமாகக் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) மனித வள முகாமைத்துவம்